உ சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிதம்பரம்

மறைஞானசம்பந்தநாயனார்

அருளிச்செய்த

மகாசிவராத்திரிகற்பமுதலியன

இவை,

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மபுரம்

ஸ்ரீ-சிவஞானபாலயதேசிகராதீனத்துச்

சிதம்பரம் ஈசானியமடம்

ஸ்ரீமத் - இராமலிங்கசுவாமிகளவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

மேற்படி சுவாமிகளெழுதிய சூசனமுதலியவற்றோடு

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்

இரத்தினவேலுமுதலியாரால்

தமது

பண்டித மித்திர யந்திர சாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

சிவமயம்.

௧. மகாசிவராத்திரிகற்பம்.

௨. மாதசிவராத்திரிகற்பம்.

௩. சோமவாரசிவராத்திரிகற்பம்.

௪. சோமவாரகற்பம்.

௫. வருத்தமறவுய்யும்வழி.

௬. உருத்திராக்கவிசிட்டம்

௭. திருக்கோயிற்குற்றம்.

௧. ஷை நூல்களின் சூசனம்.

௨ சிவராத்திரிபுராணத்தில்சிவராத்திரிமான்மியச்சருக்கம்

இவை இதிற் சேர்க்கப்பட்டுள்ளன.

விலை அணா - ௪.

உ

கணபதிதுணை.

முகவுரை.

இந்நூலாசிரியர் வேளாளர்குலத்திலே பரம்பரைச்சைவாசாரியர் மரபிலுதித்து,மறைஞானசம்பந்தரெனத்திருநாமம் பெற்று இளம்பருவத்திலேயே இலக்கிய இலக்கண முதலிய கருவிநூல்களையும் சைவசித்தாந்த சாத்திரங்களையும் சிவாகமாதிகளையும் நல்லாசிரியரைவழிபட்டு முறையினாய்ந்து, வடமொழி தென்மொழிகளில் வல்லராய், அவற்றினுண்மைப் பொருள்களை ஐயந்திரிபறத்தெளிந்து, மெய்யுணர்வுடையராகி, நன்மாணாக்கர்களுக்குக் கல்விகற்பித்தலோடு ஞானோபதேசமும் புரிந்துகொண்டு, சிதம்பரத்திலே வீற்றிருந்தவர்.

இத்தகைய இவர் தாம்பெற்ற அரும்பேறு தமிழ்நாடுமுற்றும்பெறுவான் கருணைமேலீட்டினால் சிவஞானசித்தியார் சுபக்ஷத்திற்கு ஒரு அரியஉரையும்,உபாகமங்களுளொன்றாகிய சிவதருமோத்தரமும்,தாம்பயின்ற சிவாகமங்களின்வழியே சைவசமயநெறி பரமதிமிரபானு சங்கற்பநிராகரணம் இறைவனூற்பயன் பஞ்சாக்கரமாலை சிற்றம்பலநாடிமாலை மகாசிவராத்திரிகற்பம் மாதசிவராத்திரிகற்பம் சோமவாரசிவராத்திரிகற்பம் சோமவாரகற்பம் வருத்தமறவுய்யும்வழி உருத்திராக்கவிசிட்டம் திருக்கோயிற்குற்றமுதலியவைகளும், அருணகிரிபுராணமும் தமிழில் அருளிச்செய்திருக்கின்றனர். இவரருளியவெல்லாம் யாவரும் விதிவிலக்குக்களையறிந்து உண்மை தெளிந்து முத்தியின்பம் தலைக்கூடுதற்கு முக்கிய சாதனமாக உள்ளவைகளேயாம்.

இவற்றுள், அச்சிற்பதிக்கப்படாதன வெல்லாம் பதிக்க வேண்டுமென்று திருக்கைலாசபரம்பரைப் பொம்மபுரம் ஸ்ரீ சிவஞானபாலயதேசிகராதீனத்துச் சிதம்பரம் ஈசானியமடம் ஸ்ரீமத்-இராமலிங்கசுவாமிகளவர்கள் மிகமுயன்றும் எங்குங் கிடைப்பது அருமையாக, அவைமுற்றும் ஒருங்கு எழுதப்பட்டதொருபிரதி சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபதியவர்களாகிய ஸ்ரீமத் சதாசிவப்பிள்ளையவர்கள்பாற் கிடைத்தது. அதில் மகாசிவராத்திரிகற்பமுதலிய நூல்களையும் எழுதிக்கொண்டு பின்னொருகால் நாடியவழி அப்புத்தகம் மெய்யாற்றுமேறு தவறினமையின் பெறற்கரியவாயுள்ள இவற்றை ஒருவாறு நிலவுவித்தல் வேண்டுமென் றுன்னுதலால் இந்நூல்களிலிருந்தவாறேயோப் பலபிரதிகளி னுதவிகொண்டு திருத்தி, முக்கியமாக வேண்டப்படுவ சிலகுறிப்புக்களும் நகனங்களும எழுதியமைத்து, அவ்வாறே அச்சிற்பதிப்பிக்கப்பட்டன. பதிக்குங்கால் எனக்குக் கிடைத்த சிவராத்திரிகற்பம் சோமவாரகற்பமென்னும் பிரதிகளிலும் முற்கண்ட குறைபாடு மிக்கிருந்தன. ஆதலின், இவ்வெழு நூல்களுள்ளும மற்றும் அச்சிடப்படாதன பரமதிமிரபானு முதலிய நூல்களுள்ளும் மற்றுங் கிடைக்கப்பெற்றுள்ளவர்கள் தயைகூர்ந்துதவின சுத்தபாடமாக்கி ஒருங்கு நிலவுவித்தல் வேண்டுமென்பது உத்தேசம். இத்திறத்த அரியநூல்கள் கிடைக்கப்பெற்றிருந்தும் யாவருக்கும் பயன்படுமாறு புரியாது வைத்திருத்தல் செல்முதலியவைக்கு இரையாகவிடுவது மாண்பன்று. இங்ஙனம் உபகரித்தற்குணமின்மையானே ஒருவர்க்கும் பயன்படாதொழிந்தநூல்கள் எண்ணிறந்தனவென்பது எவருமறிந்த விஷயமேயாகலின் யாம அதுபற்றி விரித்திலம்.

ஈ. இரத்தினவேலு முதலியார்.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

மகாசிவராத்திரிகற்பம்.

உலகம் புரிய வுமைபெற்ற கைக்கை
மலையினடி வாரஞ்சேர் வாம். க.

உலகமும் பல்லுயிரு மொன்றிநின்றைந் தோங்கி
யிலகுமம லன்சிவமென் பேம். உ.

அனைத்துயிரு நீங்கா வமலனைநீங் காளென்
மனத்தினுமுள் ளான்குறையென் மற்று. ௩.

கந்தனடி பந்தனடி கட்டிலாவேந் தன்முதலோர்
சந்திருத்தா ளும்பணியாந் தாழ்ந்து. ௪.

ஆகமத்து மாராய்ந்தமலசிவ ராத்திரியின்
மாகத்திற் பூசனைசொல் வாம். ரு.

(௧) அதிகாரமென்பது இரட்டுறமொழிதல். (௨) இக்கற்பத்திலுள்ள சிவபூசைப் [illegible] காணப்படாமையின் இந்நூலாசிரியரருளிய பரமசிவபூசாநவிலுள்ள துதி [illegible] ஈண்டுச் சேர்க்கப்பட்டது. (௩) சௌரமானப்படி கும்பத்திற் சூரியனிருக்கையில்வரும் மாசி மாத அபரபக்கச்சதுர்த்தசி உத்தமமும், சாந்திரமானப்படிவரும் மாகமாத அபரபக்கச்சதுர்த்தசி மத்திமமும், சாந்திரமானப்படிவரும் பால்குனமாத அபரபக்கச்சதுர்த்தசி அதமமுமா மென்று காரணம் காமிகமுதலிய ஆகமங்களினும், சாந்திரமானப்படி மார்கழியில்வருந் தை மாதத்திற்கு விவாகமுதலிய சுபகாரியங்களில் நிஷேதமேற்பட்டிருப்பதுபோலத் தை [illegible] த்தில் வருகிற மாகமாதசிவராத்திரி கொள்ளலாகாதென அம்மாதத்திற்கு நிஷேதமேற்பட் டிருத்தலின் சௌரமானப்படி மாசிமாதத்தில்வரும் சாந்திரமான மாகமாசமே மாகமாசமெ னக்கொள்ளல்வேண்டுமென்று மேற்படி காமிகம் புரோத்கீதமுதலிய ஆகமங்களினுங் கூறப் பட்டிருத்தலான் ஈண்டுக்கூறுவது அவ்வுத்தமமாத சிவராத்திரியேயெனபார் "மாகத்தி [illegible] அமலசிவ ராத்திரியின் பூசனை சொல்வாம்" என்றார்.

மாகத் தபரதிர யோதசியோ டேபதினுன்
கேகவா ரத்திரிசை யின். ௬.

அற்றைநிசி யிற்சிவன்ற ளர்ச்சிக்க பாசவித
மற்றமலன் பாதமடை வார். ௭.

சத்திமய மேபதின்மூன் றும்பிற் சதுர்த்தசியச்
சத்திமான் மேனியே தான். ௮.

திரயுதிர யோதசிநா லெழொன்றி னேடே
யொருநா ழிகைபதினுன் குள். ௯.

ஒன்றியுறி னுத்தமத்தி னுத்தமமே சத்திமயங்
குன்றியுறி னுத்தமமாக் கொள். ௧௦.

ஒன்றுடனு மொன்றச் சதுர்த்தசியி னர்ச்சிக்க
மன்றவது தான்மத்தி மம். ௧௧.

ஒன்றிற் சதுர்த்தசியி னேடே யமாவாசை
மன்றவது தானதம மாம். ௧௨.

கூடினமா வாசைபதி னைன்கிறுதிக் கூறுதனிற்
கூடுமதற் குப்பெயர்கு கு. ௧௩.

புரிந்தார் குகுப்புணர்ந்த பொல்லாநாட் பூசை
யெரிந்தார் நிரயத் திழிந்து. ௧௪.

வைதிகர்க்கே பாங்கமா வாசைச் சதுர்த்தசிதான்
சைவர்க் கதன்முன்னுட் சால்பு. ௧௫.

திதித்திரயஞ் சேர்ந்த சிவராத் திரிதான்
மதிக்கிலிரு வர்க்கும் வரம். ௧௬.

அற்றைநிசி யந்தத் தமாவாசை தான்வந்து
பற்றுதன்முன் பூசையினைப் பண். ௧௭.

---

(௯) மயம - வடிவம. பின் - என்டு அபரபக்கம். (௧௦) சத்திமயம் - என்டுத் திரயோ தசி திதி. (௧௩) குகுவெனபதற்கு, சந்திரதரிசனமில்லாத தென்பதுபொருள்.

தந்தமக்குத் தக்கசம யத்தினருஞ் சித்தார்க்குச்
சிந்துமிடர் வாய்க்குஞ் சிறப்பு. ௧௮.

அருச்சனையில் லாருறங்கா தற்றைநிசி முற்றுஞ்
சரிக்கசிவன் றாள்வணங்கித் தாம். ௧௯.

தரிக்க கவுதுகமுன் றாளதன்பின் றாளிற்
பிரிக்கவுண லாதி பிற. ௨௦.

ஆடிநீர் வேண்டுமுப யோக விதமனைத்துந்
தேடிச் சிவபூசை செய். ௨௧.

புரிகயா மந்தோறும் பூசைநிசி வேலை
பரிவுறவே நூல்விதியைப் பார்த்து. ௨௨.

ஆட்டுக கவ்வியம்பஞ் சாமிர்தந் தேனிக்கி
னீட்டியநீர் யாமமுறையின். ௨௩.

சர்க்கரைதேன் பாலெய் ததியென்ற வோரைந்து
மறபுதனுக் காட்டுமமிர் தம். ௨௪.

தாவித்தக் கவ்வியத்தைப் போலத் தனித்தனியே
யாவித் தரன்முடிமே லாட்டு. ௨௫.

சாத்துக வில்வமலர் சாதிநந்தி யாவர்த்தப்
பூத்தனையும் வேலைமுறை புக்கு. ௨௬.

முறையுறவே முற்கான்னம் பாயசந்தி லான்ன
மிறைமுன்சுத் தான்னமுநீ யேற்று. ௨௭.

பரிவுறவே பாத்திய மாதி யனைத்தும்
புரிகவிதி பார்த்துணர்ந்தின் போடு. ௨௮.

---

(௨௦) கௌதுகம் - இரக்ஷாபந்தனம். (௨௭) முற்கம் - பச்சைப்பயறு. (௧௩-௨௩-௨௭) இவற்றிற்கூறப்படுவனவற்றை முதற்சாமமுதல் நான்குசாமங்களுக்கும் முறையேகொள்க. (௨௪) இதிற்கூறப்படுவது ரஸபஞ்சாமிர்தமெனவும் இதனோடு வாழைப்பழம் பலாப்பழம் மாம்பழம் மூன்றுங்கூட்டின் அது பலபஞ்சாமிர்தமெனவும் பெயர்பெறும். (௨௫) தாவித்தல் - தாபித்தல். ஆவித்தல் - ஆவாகித்தல் என்பர்.

பசிக்கழிந்தா னீரலீது பால்பழந்தா னற்பம்
புசிக்கமுதல் யாமம்பூ சித்து. ௨௯.

அற்றை நிசியுறங்கா தர்ச்சித்துப் பாரணத்தை
மற்றையநாட் செய்கை வரம். ௩௰.

ஆரணனை யர்ச்சித் தமுதருந்தி யன்பர்க்குப்
பாரணத்தை நீபின்பு பண். ௩௰௧.

பாரணஞ்செய்தான் பகலுறங்கி னூற்றவனா
யாரணனைக் கொன்றபழி யாம். ௩௰௨.

உறங்கினான் சாந்தியெனு மோமம் புரிக
மறைந்துகெடு மேயந்த மாசு. ௩௰௩.

அங்குர மாதி யியற்ற வகவினையு
மங்குமுறை செய்நூன் மதித்து. ௩௰௪.

அக்கால மாகச் சதுர்த்தசியி னர்ச்சித்துப்
புக்கான்வே டன்மேற் புரம். ௩௰௫.

தூர்த்தன் சுகுமார னந்தணன்மா சப்பூசை
பார்த்தான்கீ தத்தாசைப் பட்டு. ௩௰௬.

அற்றான்முன் செய்த வவல வினையனைத்தும்
பெற்றான் சிவபுரத்தைப் பின். ௩௰௭.

நின்மலனை நூல்விதியி னர்ச்சித்த நேசர்க்குப்
பன்னவல்லா ராரே பலம். ௩௰௮.

கடனுறவிக் கற்பத்தைக் கற்றவர்கேட் டாரு
மடைவர மலன்சிவலோ கம். ௩௰௯.

மகாசிவராத்திரிகற்பம் முற்றிற்று.

(௩௰) பாரணம் - சத்தியையுண்டபின்னும் போசனமெனப்படும். (௩௪) அகவினை - பாவச்செயல். (௩௯) கற்பம் - விதி.

சிவமயம்.

மாதசிவராத்திரிகற்பம்.

மாதசிவ ராத்திரியுஞ் சொல்வா மலமறுக்கும்
போதகன்பா தத்தார்வம் பூண்டு. ௧.

பங்குனிக்குஞ் சித்திரைக்கும் வைகாசிக்கும் பாங்கபர
திங்களென வோதீ தெளி. ௨.

இரண்டுபதின் மூன்றைந் தெனுந்திதியிற் பூசை
யிரண்டறவீசற் கியற்று. ௩.

முந்தியுறும் பக்கந்தா னானிமுத லைப்பசியே
யந்தமிவற் றிற்பாங்கே யாம். ௪.

மூன்றெட்டு முந்நான்கைந் தேழு முறையுறவே
யான்றதிதி நாளருச்சி யாங்கு. ௫.

இருபக்கங் கார்த்திகைக்கு மார்கழிக்கு மேய்க்கு
மிருநான்கீ ராறுதிதி யெண். ௬.

புரிசிவ பூசையினைப் பூருவபக் கத்தி
னிருநான்கிற் றைமாசத் தின். ௭.

இட்டலிங்கந் தன்னிற் பரார்த்தத்து மிம்முறையே
யிட்டமுறப் பூசை யியற்று. ௮.

பாரணத்தை மற்றையநா டன்னிற் பகற்பவனுக
பூரணையைப் பூசை புரிந்து. ௯.

இரண்டு படினே திதியிரவி னேற்றந்
திரண்டதிதி தானே சிறப்பு. ௰.

(௧) போதகன் - யானைமுகவிநாயகன். (௨) அபரதிங்கள் - சண்டு அபரபக்கம் இச் செய்யுண்முதலியவற்றிற் கூறப்படுமாதங்கட்கு அவ்வவற்றின்கீழ்க் கூறப்படும் இலக்கமுள்ள திதிகளை முறையே கூட்டிக்கொள்க.

இந்தமுறை மீனமெழுவாய் மகரந்தா
னந்த மிவற்றனைத்து மாம். கக.

அற்றாரே பாவ மருச்சித்தா ரிந்தமுறை
பெற்றார் சிவலோகம் பின். கஉ.

அங்குர மாதி விதியறிந்தே யாகமத்தி
லிங்கியற்றி னன்றென்றே யெண். கரு.

இந்த வியலை யெழுதிற் படித்திடினும்
பந்தவினை போமுறுமின் பம். சச.

மாதசிவராத்திரிகற்பம் முற்றிற்று.

சிவமயம்.

சோமவார

சிவராத்திரிகற்பம்.

தந்திமுகன் றுணையினைவாந் தானே தருமெய்மூட்
சிந்தனை செய்வ சிறப்பு.

சொல்வா மினிச்சோம வாரசிவ ராத்திரியு
மெல்லாஞ் சிவமென் றெணி.

சந்திரவா ரத்துதயந் தங்கியமா வாசைநசி
யந்தியயா மத்திலுமுற் றால்.

ஒருமூன்று கோடிசிவ ராத்திரியொ டொக்கும்
பரமசிவ னைப்பூசை பண்.

அந்தியயா மத்தி னரைநா ழிகையுறினு
மந்தியயா மத்தினிறை வாம்.

அற்றிடினே யந்தியயா மத்தினமா வாசைசிறி
தற்றநிசி பூசைவர மன்று. ௬.

மற்றையநாட் பூசை முடித்து மறையவர்க்கு
நற்றவர்க்கு மோதனத்தை நல்கு. எ.

அருந்தியசன் பின்னுறங்கா தன்றுபக லெல்லா
மிருந்துசிவன் பாதமல ரேத்து. அ

அருச்சித்தா ரிவ்வா றரித்துமல மெல்லாம்
பரித்திருப்ப ரீசன் பதம். ௯.

உத்தரபக் கத்திற் சதுர்த்தசிமுன் றேனுமுறை
யொத்துறினே யவ்வாரத் துள். ௧0.

அற்றை நிசியு மரியசிவ ராத்திரியாம்
பற்றறுப்பா னைப்பூசை பண். ௧௧.

பண்ணிடுகெ மற்றையநா ளைப்பகலிற் பூசனையைப்
பண்ணியதன் பின்பா ரணம். ௧௨.

அருத்தித் தவத்தார்க்குப் பின்று மருந்திற்
பரிப்பார் விரத பலம். ௧௩.

புரிந்தார்க ளிந்நிசி யிற்சிவனைப் பூசை
பிரிந்தான் சிவலோகம் பெற்று. ௧௪.

அண்டமனைத் தும்மொடுங்கும் போதகநோ யற்றமலங்
கண்டிடுவார் பார்சிவபோ கம். ௧௫.

உ.றவ ருகந்தாரு மிந்நோன் புளத்தே
யறவர்கா மாதிகல சம். ௧௬.

ஓர்ந்தார்க ளிந்தவிய றத்தமுளத் தூணமலச்
தீர்ந்தே திளைப்பார் சிவம். ௧எ.

சோமவாரசிவராத்திரிகற்பம் முற்றிற்று.

சிவசண்முகன்றுணை.

சிவராத்திரிகற்பசூசனம்.

முன்னொரு கற்பவிறுதியிலே, பிரமதேவர்முதலிய பிரபஞ்சமனைத்துஞ் சிவத்திலொடுங்க, அவ்விரவிலே உமாதேவியார் சிவபெருமானை வேதாகமவிதிப்படி நான்கு யாமமும் அருச்சித்து, அவ்விரவுபுலர்ந்தபின் அப்பெருமானையிறைஞ்சி, "யான்வழிபட்ட இவ்விரவு சிவநிசியென வழங்கவும் இந்நிசியிலே நான்குயாமமும் பூசைபுரிந்தவர் முத்தியெய்தவும் அருளல்வேண்டும்" என வேண்டி வரம்பெற்றனர். இதுவே சிவராத்திரி வரலாறென்பர்.

இஃதன்றியும், மற்றொரு கற்பவிறுதியிலே, பிரளயவெள்ளத்தாழ்ந்த வுலகைத் திருமால் வராகவுருக்கொண்டு தூக்கி நிறுவி, மேருவாதிய மலைகளை அதற்காதாரமாக நாட்டி, பின்னர்த் தமது நாபிக்கமலத்துதிப்பித்த பிரமதேவருக்கு உலகைப்படைக்குமாறு பணித்து, தாந் திருப்பாற்கடலை யடைந்து அறிதுயிலமர்ந்திருக்க; அப்பிரமதேவர் முன்போல யாவும் படைத்துத் தாமே இறைவரெனத்தருக்கித் தம்மாலாக்கப்பட்ட அனைத்தையும் நாடிவருங்கால், அத்திருப்பாற்கடலையெய்தி, ஆங்குள்ள திருமாலையெழுப்பி, நீ யாவனென வினவினர். அவர் யானே யாவுநல்கும் பரம்பொருளெனலும், பிரமதேவர் யாவுநல்கும் பரம்பொருள் யானேயாக நீ யிங்ஙனமிசைப்பதென்னெனக் கலாம்விளைத்தனர். இவ்வாறு இருவரும் கலாய்த்து அஸ்திரசஸ்திரங்களாற் போர்புரியுங்கால் இருவர்க்கு மிறுதியெய்தாவாறு இடையே சிவபெருமான் அனற்பிரட்சிவடிவாய்ச் சிவலிங்கவுருக்கொண்டு திகழ்ந்தனர்.

சிவராத்திரிகற்பகூசனம்!

நிகழ்ந்த அவ்விலிங்கோற்பவகாலமாகிய அம்மாசிமாத அபர பக்கச் சதுர்த்தசியோடுகூடிய நடுவிரவே சிவநிசியெனப்பட்டது. பின்னரவ்விருவரும், அச்சோதிலிங்க ரூபவடிவின் அடி முடிகாண்பான் றொடங்கி, இயலாமையின் மீண்டு, அப்பெருமானை வழிபட்டு, அக்கடவுளருளியவாறே ஆதியில் அம்பிகை நோற்ற அச்சிவநிசி விரதத்தைத் தாமும் நோற்றலுடையராய், நாலுயாமமும் பூசித்து வரம்பெற்றுத் தேவியார்களோடு தம் பதவிகளையடைந்து வாழ்ந்தின்புற்றனர். என்பதும் ஒன்று. இவ்விருசரிதமும் வேதாகமபுராணசித்தமே.

இச்சிவராத்திரி மகாசிவராத்திரி மாதசிவராத்திரி பக்கசிவராத்திரி வாரசிவராத்திரி நித்தியசிவராத்திரி என ஐவகைப்படும். அவற்றுள், மகாசிவராத்திரி உத்தமோத்தமம் உத்தமம் மத்திமம் அதமமென நான்குவகைப்படும். இந்நான்கனுள், இரவிலே திரயோதசிதிதி மிக்கிருப்பச் சதுர்த்தசி குறைந்து வருவது உத்தமோத்தமம். திரயோதசிகுறையச் சதுர்த்தசி மிக்குவருவது உத்தமம். இரவுமுழுமையும் சதுர்த்தசியே வருவது மத்திமம். சதுர்த்தசி அமாவாசையோடுகூடிவருவது அதமம் என்பதே இந்நூலாசிரியர் தாங்கொண்ட நூற்றுணிபு.

இவ்வாறன்றிச் சூரியோதயந் தொடுத்து அஸ்தமயனபரியந்தம் திரயோதசியிருக்கப் பின் சதுர்த்தசிவந்து அற்றையிரவும் மறுநாட்பகல் அஸ்தமயனபரியந்தமும் இருப்பது உத்தமோத்தமம். சூரியாஸ்தமயனத்திற்குப் பின் சதுர்த்தசி கூடி மறுநாள் அஸ்தமயனத்துக்குப் பின்னும் நிற்பது உத்தமம். சூரியோதயந் தொடுத்து மறுநாட்சூரியோதயம் வரையிற் பொருந்திநிற்குஞ் சதுர்த்தசியும் அஸ்தமயனத்துக்குமுன் கலக்குஞ் சதுர்த்தசியும் அஸ்தமயனத்துக்குப் பின் ஏழுநாழிகை அல்லது பத்து நாழிகைக்குமேல் கூடுஞ் சதுர்த்தசியும் மத்திமம். இரவிலே இருபதுநாழிகை அல்லது பதினைந்துநாழிகைவரை சதுர்த்

தசி நிற்க அப்பால் அமாவாசைவந்து கூடுவது **அநமம்** என்பதும் நூற்றுணிபே.

அற்றேல், அஃதாகுக. விநாயகசதுர்த்தி மத்தியான்ன வியாபகமும் பார்வணசிராத்ததிதி அபரான்ன வியாபகமும் பிரதோஷம் சாயங்காலவியாபகமும் சிவராத்திரி பிரதோஷ அர்த்தராத்திரிகளின் வியாபகமும் நரகசதுர்த்தசி அருணோதய வியாபகமும் பெறுவதே முக்கியமென்றும், சிவராத்திரிக்குச் சதுர்த்தசிவியாபகம் வேண்டப்படுங்கால மிரண்டனுள் பூசாரம்பகாலமாகிய பிரதோஷகால வியாபகம் இல்லாதொழியினும் இலிங்கோற்பவ காலமாகிய அர்த்தராத்திரி வியாபகம் ஆவசியகம் வேண்டுமென்றும், அர்த்தராத்திரியே இலிங்கோற்பவ விசேடகாலமாகலின் அதிலொரு கலையளவேனும் சதுர்த்தசிவந்துகூடுமாயின் அதுவே சிவராத்திரியென்றும், அர்த்தராத்திரிக்குப்பின் சதுர்த்தசிவந்து மற்றைநாள் அர்த்தராத்திரிவரையுமிருக்க, அதற்குமேல் அமாவாசை வந்துகூடினும் பிந்திய இரவே கொள்ளத்தக்கதென்றும் ஆகமாதிகள் விதித்தலானும்; திரயோதசியோடு சதுர்த்தசிகூடுவதே சிவராத்திரியென்பது ஆகமாதிகளின் கருத்தாயின் அங்ஙனங் கூறுவதே மரபாக அவை அங்ஙனங்கூறாது, உத்தமோத்தமம் உத்தமம் மத்திமம் அதமமென்னும் சிவராத்திரிகளின் பகுப்புக்களையும் இலக்கணங்களையும் அவைகளை யனுட்டிக்கு முறைமைகளையும் தனித்தனிச் சாற்றுதலானும், அர்த்தராத்திரிக்கு முன்னும் பின்னும் சதுர்த்தசி எவ்விரவில் வியாபித்திருக்கின்றதோ அவ்விரவே சிவராத்திரி; அதிற்றானே சிவனைப்பூசித்தல்வேண்டுமென்று **காமிகத்தும் குமாரதந்திரத்தும்** கூறப்பட்டிருத்தலானும், திரயோதசியோடு கூடினும் அமாவாசையோடு கூடினும் எவ்விரவில் அர்த்தராத்திரி வியாபகமாகச் சதுர்த்தசியிருக்கின்றதோ அவ்விரவே சிவராத்திரியென்று சுவாயம்பு

வாகமத்தும் கிரணாகமத்தும் துணிபுகூறலானும், அர்த்தராத்திரிக்குள்ளேயாவது அதனளவாவது சதுர்த்தசியிருக்க அர்த்தராத்திரிவேளையில் அமாவாசைவந்து கூடுவதுதான் பிரமகத்தியாதி தோஷங்களைத்தரும், பின்னர் ஒருநாழிகை கழித்துவரினும் அதற்கு அத்தோஷமில்லையென்று சிந்தியமுதலிய ஆகமங்களில் விளக்கலானும், திரயோதசியோடு கூடிய சதுர்த்தசியிற்றானே சகல பிரயத்தனமுஞ்செய்து சிவபூசைமுதலியன செய்தல் வேண்டுமென்பது திரயோதசியோடு கூடிய சதுர்த்தசி முக்கியகாலத்திருப்ப அதனைவிட்டு அமாவாசையோடு கூடியதில் செய்தலாகாதென்னுங் கருத்துப் பற்றியதே யாகலானும், பிறவாற்றானும் சிவராத்திரிக்கு இலிங்கோற்பவகாலத்துச் சதுர்த்தசி வியாப்தியே பிரதானமென்று ஏற்படுகின்றது.

அங்ஙனமாக இந்நூலாசிரியர், சிவாகமாதிகளில் மிகத் தேர்ந்தவராய், அவற்றின் வழியே பரமததிமிரபானு சங்கற்ப நிராகரணம் சைவசமயநெறி இறைவனூற்பயன் முதலியவும் *சர்வோக்தமென்னும் மூலசிவாகமத்தின் உபாகமங்களாந்தனுளொன்றாகிய சிவதருமோத்தரமும் தமிழில் அருளிச்செய்தவராயிருந்தும், இவர் இரவிலே இருபத்தொன்பது நாழிகைக்குமேல் சதுர்த்தசி ஒருநாழிகை கலப்பினும் அதுவே உத்தமோத்தம சிவராத்திரியென்னும் வாக்கியம் விதி விலக்கு துதியென்னும் மூவகை வாக்கியத்துள் துதிவாக்கியமேயாகவும், அதை விதிவாக்கியமாகக் கொண்டது மாறன்றோவெனின், மாறன்மை காட்டுதும்:—

இரவில் இரண்டாம்மூன்றாம் யாமங்களே மகாநிசியெனப்படுமென்று பாராசரஸ்மிருதியாதிகளினும், அதனுள்ளும் பதினைந்து நாழிகைக்குமேல் பதினேழரை நாழிகைக்குட்

* சர்வோக்தத்தின் உபாகமங்களாவன - ஈசானம் சிவதருமம் சிவதருமோத்தரம் திவ்யபுரோக்தம் குபேரம் என்பன.

பட்டகாலமே மகாநிசியென்று சுவாயம்புவாகமத்தினும் கூறப்பட்டிருக்கின்றன. மேலும் இக்கருத்தேபற்றி இரண்டாம் மூன்றும் யாமங்களே மகாநிசியாம். அதன் மூன்றுபாகத்துள் *இரண்டாம் பாகம்வரை திரயோதசியிருக்கப் பின் சதுர்த்தசி வருவதும் அத்தகைய திரயோதசியோடு சதுர்த்தசி இதத்தைய மகாநிசியில் வியாபித்திருப்பதுவுமே உமாசிவராத்திரியெனப்படும். அதுவே † உத்தமோத்தமமென்று முறையே விஜயாகமத்தினும் சிவாகசியத்தினும்; அர்த்தராத்திரிக்குமுன் திரயோதசியும் சதுர்த்தசியும் கலந்துவருவது உத்தமத்தில் மத்திமமென்று கிரணாகமத்தினும்; அஸ்தமித்து நாலுநாழிகைவரை திரயோதசியிருக்கப் பின் சதுர்த்தசிவருவதும் பகல் முழுமையும் திரயோதசியிருக்க இரவில் சதுர்த்தசிவருவதும் உத்தமத்திலதமமென்று முறையே காரணம் விஜயமென்னும் ஆகமங்களினும்; பகலும்இரவும் சதுர்த்தசியே யிருப்பது மத்திமத்தி லுத்தமமென்று சூக்ஷுமாகமத்தினும்; இரவில் ‡எட்டாம் பாகத்திற் சதுர்த்தசிவருவதும் இரவில் இருபத்தொன்பது நாழிகைக்குமேற் சதுர்த்தசிவருவதும் இரவில் திரயோதசியேயிருக்கப் பின் சதுர்த்சி ஒரு ¶ கலையளவேனும் வருவதும் மத்திமத்தில் மத்திமமென்று முறையே விஜயம் வாதுளம் காமிகமென்னுமாகமங்களினும்; உதயத்தில்

---

* மகாநிசியின் இரண்டாம்பாகம்வரை திரயோதசியிருக்க வென்பதற்கு - இரண்டாம் மூன்றும் யாமங்கட்குரிய நாழிகைபதினாறையும் முக்கூறாக்கி அவற்றுள் இருகூற்றிற்குரிய நாழிகைபத்தும் முதற்சென்ற யாமத்திற்குரிய நாழிகையேழரையும் ஆகப் பதினேழரைநாழிகைவரை திரயோதசி யிருக்கவெனக் கொள்க.

† உத்தமத்திலுத்தமம் உத்தமோத்தமமெனவும் உத்தமத்தில்மத்திமம் உத்தமமத்திமமெனவும் உத்தமத்திலதமம் உத்தமாதமமெனவும் பெயர்பெறும். இங்ஙனமே மத்திமப்பகுதிக்குங்கொள்க.

‡ இரவில் எட்டாம்பாகமென்பதற்கு - இரண்டரைநாழிகையை ஒருபாகமாகக்கொண்டு பதினேழரைநாழிகைக்கு மேற்பட்டகாலமென்றும் மூன்றேமுக்கால்நாழிகையை ஒருபாகமாகக்கொண்டு இருபத்தாறேகால்நாழிகைக்கு மேற்பட்ட காலமென்றும் கொள்வர்.

¶ கலையென்பது - ஒருநாழிகையளவினுள் பதினைந்தின் ஒருகூறு.

திரயோதசியும் பின்சதுர்த்தசியும் இரவிளைந்தத்தில் ஆமாவா சையுமாகத் திதித்திரயஞ் சேர்ந்தவருவது மத்திமத்திலசம மென்று இலளிதம் சுப்பிரபேதமென்னு மாகமங்களினும், சிவரகசியத்தினும்; அமாவாசையோடு கூடியதில் ஆராதித்த லாகாதென்பதால் அதுவே அசயமென்று வாதுளம் காமிகம் சந்தானம் யோகஜமென்னு மாகமங்களினும்; அமாவாசை யோடு சேர்ந்ததினிழிவு புலப்படுத்தற்பொருட்டே இங்ஙனம் சிவராத்திரிகள் எழுகூறாகப் பிரித்து விளக்கப்பட்டிருக் கின்றன.

இம்மட்டோ! இன்னும் திரயோதசி சத்திரூபமும் சதுர்த் தசி சிவரூபமுமாகலின் இவ்விரண்டின் சேர்க்கையுடைய இர வே சிவலிங்காகாரமெனப்படுதலால் அத்தன்மைய திரயோதசி யோடுகூடிய சதுர்த்தசியில் விரதமனுட்டித்தல் சிவலிங்க பூசைசெய்தல் நித்திரைவிழித்தல் முதலியவை யியற்றின் கோடியாகபலமும் சகல போகங்களும் முடிவில்மோக்ஷமும், சித்திக்குமென்று மேற்கூறிய விஜயமுதலிய வாகமங்களி னும், காந்தம் பாத்மமுதலிய புராணங்களினும்; அமாவாசை யோடுகூடிய சதுர்த்தசியில் மேலியம்பியவற்றை யியற்றின் பூர்வபுண்ணியத்தைக் கெடுத்துவிடுமென்று வாதுளாகமத் தினும்; சனங்களுக்குப் பயத்தையும் அரசனுக்குக் கெடுதியை யும் செய்யுமென்று காமிகாகமத்தினும்; ஒருகலாமாத்திரம் அமாவாசையோடு கூடினும் அது அதிற்பூசிப்போர்க்குப் பூர்வ புண்ணியநாசம் பிராணஹானி ரௌரவநரகப்பிராப்தி எய்து விக்குமென்று சந்தானகமத்தினும்; அமாவாசையோடு கூடிய சதுர்த்தசி ஆன்மாநீங்கப்பெற்ற சரீரத்துக்கு ஒப்பு, அன்றிரவு விழிப்பவர்களுக்குப் பிரமகத்தியாதி தோஷமும் நரகப்பிராப் தியுமுண்டென்று யோகஜாகமத்தினும்; பிரதோஷவியாப்தி அர்த்தராத்திரி வியாப்திகளைப் புகழ்ந்துகூறியது உத்தரோத்

MAHAMAHOPADHYAYA
DR U.V. SWAMINATHA IYER LIBRA
...ADYAR... THIRUVANMIYUR :: MADRAS

தம உத்தம சிவராத்திரிகளைச் சுட்டியேயாகலின் மத்திமபக்ஷத்தில் அவ்வேளையில் சதுர்த்தசிவியாப்தி யில்லாதொழியினும் குற்றமின்றென்பது தோன்ற மகாநிசியில் திரயோதசியோடு வியாபித்திருப்பதே முக்கியமென்று சிவரகசியமாதியவற்றினும்; பிறவற்றினும் இங்ஙனம் திரயோதசியோடு கூடியதற்கே உயர்வுண்மையும் அமாவாசையோடு கூடியதற்கே இழிவுண்மையும் விளங்க இசைக்கப்பட்டுள்ளன.

இவற்றையெல்லாம் ஒற்றுமைப்படுத்து ஒருங்கி ஆராய லுறின் இரவின்முடிவில் சதுர்த்தசி ஒருயாமமேனும் ஒரு நாழிகையேனும் ஒருகலையேனும் வியாபித்திருப்பினும் அத்திரயோதசியினன்றே கொள்கவென ஆங்காங்கு வருவது துதி வாக்கியமேயாயினும், அந்தத்தினத்தில் பிரதோஷ வியாப்தியோடு அர்த்தராத்திரியின் வியாப்தியுமமையச் சதுர்த்தசியே தனித்துநில்லாது அமாவாசைக் கலப்பும் வரப்பெறுமாகலின் அது நிஷேதமுடைத்தாய் முடிதலான் ஆண்டு அம்முதற்றினமே கொள்ளல்வேண்டுமெனவும் திரயோதசியோடுகூடிய சதுர்த்தசியே எவ்வாற்றானும் நிர்த்தோஷமுடையதெனவும் ஏற்படுதலால், சதுர்த்தசி அர்த்தராத்திரி வியாபகமாக வாராது மேற்கூறிய மகாநிசியின் மூன்றாங்கூற்றிற்கலக்கினும்அதுவே உத்தமோத்தமமெனக் கொள்ளல்வேண்டுமென்பார் அதனது பெருமைதோன்றத் திரயோதசியோடு ஒருநாழிகை சதுர்த்தசி கலக்கினும் உத்தமோத்தமமென்று நாட்டியும், அம்மகாநிசி சம்பந்தத்தினும் இயையாவழி மற்றை உத்தம மத்திம அதமங்களைக்கொள்ளல்வேண்டுமென்பார் அவற்றினிலக்கணங்களைத் தனித்தனிவிதந்தும், அனுட்டிப்பவரெவர்க்கும் தோஷம் அணுகாவாறு குறிக்கொண்டு ஆகமவாக்கியங்களைத் தழுவிப் பொதுநிலையினிலவி நால்வகைச் சிவநிசியையும் உடன்பட்டு

நன்குவிளக்கிப் போந்தாராகலின் இது மாறுவது யாங்ஙனம்? என்பது.

இக்கூற்றுமிகநன்று: அர்த்தராத்திரிவியாபகமாகச் சதுர்த்தசியிருக்கவேண்டுமென்பதும், அர்த்தராத்திரிக்குமுன் அமாவாசைவரின் அதுவே பிரமகத்தியாதிதோஷங்களைத் தருமன்றிப் பின்னர் ஒருநாழிகை கழித்துவரினும் அதற்குஅத்தோஷமில்லையென்பதும், மேற்கூறிய ஆகமாதிகளின் வாக்கியங்களையாகவும், அவற்றைக் கொள்ளாது திரயோதசியோடு கூடிய சதுர்த்தசியை வியக்தவாக்கியங்களை மட்டுமே ஈங்குப் பிரமாணமாகக் கொண்டது யாதுபற்றியெனின் கூறுதும்:—

அர்த்தராத்திரிவியாபகமே முக்கியமாக வேண்டுமென்பது ஆகமாதிகளின் கருத்தாயின் இரவில் இரண்டாம் மூன்றும் யாமங்களை மகாநிசியென்றும் அதனுள்ளும் பதினைந்து நாழிகைக்குமேல் பதினேழரை நாழிகைக்குட்பட்ட காலமே மகாநிசியென்றும் அம்மகாநிசியின் மூன்றுங்கூற்றிற் சதுர்த்தசிவரினும் அதனையே கொள்கவென்றும் இவ்வளவு வரம்பறுத்தி, இரவின்மத்திய இருயாமங்களையும் அர்த்தராத்திரியாகப் பாராட்டிக் கூறவேண்டுவதில்லையாகலானும், திதி விரதங்கட்கெல்லாம் அவ்வத்திதியந்தத்திற் பாரணஞ்செய்தல்வேண்டுமென்பதே விதியாகவும் ஆகமங்களினும்நாலாதரிச முதலிய நூல்களினும் சிவராத்திரி யொழிந்தவைகட்கே இந்நியமமென்றுகூறி அனுட்டிக்குந்திதியாகிய சதுர்த்தசியிலேயே அச்சிவராத்திரிக்குப் பாரணம்விதித்தது நோக்கின் திரயோதசிக்கலப்புடைய முதற்றினங் கோடற்பொருட்டேயென்பது தெள்ளிதினறியக்கிடத்தலானும், திதித்திரயஞ் சேர்ந்துவருங்கால் வேறு தினமில்லையாகலின் அனுட்டித்தற்குரியதினம் அதுவேயாகவும் அதிலனுட்டித்தாலும் அமாவாசைசேர்ந்த தோஷநிவிர்த்திக்காக அகோராஸ்திர மந்திரத்தினல் சிவாக்கினியில் நூறு

முறை ஓமஞ்செய்யவேண்டுமென்று அவ்வமையினிழிவு தோன்றச் சுப்பிரபேதாகமத்தில் விதந்து கிளத்தலானும், திரயோதசியினந்தத்திற் சதுர்த்தசி கலக்கப்பெற்றதற்கு இத்தகைய நிசிதம் யாண்டும் காணப்படுதலின்மையானும், அர்த்தராத்திரிக்குப் பின் சதுர்த்தசிவரினும் திரயோதசிக் கலப்புடையதே சைவராதியர்க்குரித்தென்றும், அர்த்தராத்திரிக்கு முன் சதுர்த்தசி ஒருகலையளவேனும் வாராது பின்வந்து மறுதினம் அமாவாசையோடு கூடினும் பின்னிரவே கொள்வது வைதிகருக்கும் விரத்தருக்குமே யுரித்தென்றும், திதித்திரயஞ் சேர்ந்துவருவது அனைவர்க்கும் பொதுவென்றும், சைவராயுள்ளோர் அத்தினத்தில் அமாவாசைவந்து கலத்தற்கு முன்னரே பூசையைமுடித்து விடல்வேண்டுமென்றும் மேற்படி ஆகமபுராணாதிகளே விதித்தலானும், திரயோதசியோடுகலந்த சதுர்த்தசியே சர்வோக்தமமென்பது பெறப்படுதலான் அதனைச் சாதித்தற்குரிய வாக்கியங்களையே ஈண்டு முக்கியமாகக் கொண்டதென்க. இன்னும் விரிக்கிற் பெருகும்.

இனிமாதசிவராத்திரியாவன:—மாதந்தோறும் வரும் சிவராத்திரிகளாம். மாசிமாதத்தில் ஈண்டு விதந்து கூறிய அபரபக்கச் சதுர்த்தசியும், பங்குனியில் அபரபக்கத் துதியையும், சித்திரையில் அபரபக்கத் திரயோதசியும், வைகாசியில் அபரபக்கப் பஞ்சமியும், ஆனியில் பூர்வபக்கத் திரிதியையும், ஆடியில் பூர்வபக்க அட்டமியும், ஆவணியில் பூர்வபக்கத் துவாதசியும், புரட்டாதியில் பூர்வபக்கப் பஞ்சமியும், ஐப்பசியில் பூர்வபக்கச் சத்தமியும், கார்த்திகையில் இருபக்கத்து அட்டமியும், மார்கழியில் இருபக்கத்துத் துவாதசியும், தையில் பூர்வபக்கத்து அட்டமியுமாம். இம்மாத சிவராத்திரி மற்றொருவகையாகக் கொள்வதும் உண்டு. அவற்றை இதிற் சேர்க்கப்படும் சிவராத்திரிபுராணச் செய்யுள்களானுணர்க.

பக்ஷசிவராத்திரியாவது:—தைமாதத்து அபரபக்கப் பிரதமை முதல் பதின்மூன்றுநாள் ஒருபொழுதுண்டு விரதமனுட்டித்துப் பின்பு பூசித்தற்குரியதாகிய சதுர்த்தசி வரப்பெறும் பதினன்காநாளிரவாம்.

வாரசிவராத்திரியாவது:—சோமவாரத்துதயந்தொடங்கி விடியல்வரை அமாவாசை யிருக்கப்பெறுவது. சோமவாரத்திரவில் நான்குயாமமும் அபரபக்கச்சதுர்த்தசி யிருக்கப்பெறுவதுமாம். இவை யோகராத்திரியெனவும் பெயர்பெறும்.

நித்தியசிவராத்திரியாவன:—பன்னிருமாதத்து இருபக்கங்களினும் வரும் இருபத்துநான்கு சதுர்த்தசிகளுமாம். இவ்வைவகைச் சிவராத்திரியுள் ஈண்டுக்கூறிய மூன்றே மிகச் சிறத்தலின் இவற்றைமட்டும் இவ்வாசிரியர் தனித்தனி யெவ்வோர் கற்பமாக விதந்து கிளந்தருளினரென்க.

சரித்திரக்குறிப்பு.

சாகபுரத்தினது அயல்வனத்திலிருந்த அங்குலனென்னும் வேடன், ஒருதினம் வேட்டைமேற்கொண்டு நெடுந்தூரஞ்சென்று அஸ்தமிக்கும்வரையும் பற்பல தொழின்முயற்சிபுரிந்தும் விலங்கு பறவை யென்பவற்றுள் ஒன்றுஞ் சிக்காதொழியப் பசியால்மிகமெலிந்து.இனி யாம் வெறுங்கையோடு செல்வதினும் இரவிலே தண்ணீர்பருகவரும் மிருகங்களைக் கொன்றேனும் ஊன்கொண்டுசெல்வதேநலமெனத்துணிந்து, ஆங்குள்ளமிருகங்களுக்கு அஞ்சுதலையுடையனாய் ஒருகுளக்கரையிலோங்கிய வில்வமரத்தின் மேலறியிருந்தனன். இருசகுங்கால், அதனடியருகில் ஒருமுனிவரால் பூசிக்கப்பட்டதொரு சிவலிங்கமிருப்பதும் அத்தினம் மகாசிவராத்திரிபுண்ணியகாலமென்பதும் அறியானாய் மிருகங்களைக் கொல்லுதற்பொருட்டெய்யும் அம்புகளை இடையே தடுக்காவண்ணம் அம்மரத்திற

திங்க ளின்கலை குறைசதுர்த் தசிமதிக் கிழமையிற் றிக
ழல்லிற், றங்கு சாமநான் களவுதொட் டிருந்திடிற் சயிலமின்
றருண் மாணைப், பங்கில் வைத்திடும் பரமனைப் பூசனை பண்
ணுக பரிவோடு, மிங்கு ணைத்தவா கமங்கண்மற் றிதனையும்
யோகராத் திரியென்றே. ௩.

ஈறு வந்தசா மத்தனை நாழிகை யிருளவா விருந்தாலுந்,
தேறு கின்றவச் சதுர்த்தசி யப்படிச் சேர்தறுங் கொளல்வே
ண்டு, மூறு தீர்தவத் துறவிர்காள் விதிமுறை யுணைக்குமிங்
கிவைவநோற்கிற், கூறு மற்றுள சிவநிசி விரதமுக் கோடிநோற்
றிடலொக்கும். ௪.

பருவ மாறுள வருடமோ ரொன்றுறு பன்னிரு மதிதோ
று, முருவ மாமதி நிறைந்தது குறைந்தவோ ரிரு பக்கத்து,
மருவு மாசதுர்த் தசியறு நான்கினு நோற்பது வழக்காகுந், திரு
வ மர்ந்தமா தவரிதை நித்திய சிவநிசி யெனச்சொல்வார். ௫.

அதிக மாகமா தத்தினிற் குளிர்கதி ரம்புலி குறைபக்கத்,
திதிபன் ணொன்குமின் றிங்கண்முற் றிரிதியை யித்திலொ மதி
தேயு, மதியி னட்டமி யிடபமா சத்துமுன் மருவுமட் டமிமா
சில், பதிக யாழ்மதி மதிவளர் சதுர்த்தியாம் பகர்ந்தகற் கட
கத்தில். ௬.

விரியும் வெண்ணிலாக் கலைகுறை பஞ்சமி விளங்குமா
வணிதன்னிற், பரியுஞ் சுக்கில பக்கவட் டமிபுரட் டாதிமுற்
பதின்மூன்று, மரிய வைப்பசிக் கம்புலி வளர்திதி யாறிரண்
டறைதேளிற், றெரியு முற்படு சத்தமி பிற்படு திதியிலட்
டமிதானும். ௭.

ஒப்பின் மார்கழி யுபயபக் கத்தினி லுறுதிதி பதினொன்
குஞ், செப்பு மான்மதி வளர்மதி தனிலுறு திரிதியை யிவை
குலக், கப்பு வேற்கரக் கண்ணுத லருச்சனைக் குரியவா கம

மெல்லாந், தப்பி லாதெடுத் திசைகொண்மா தச்சிவ நிசியெ னச் சாற்றும்மே. அ.

மாறின் மார்கழிச் சதுர்த்தசி யாதினொ மருவினுத் தம மாகு, மூறி லாக்குடத் திங்களிற் குளிர்கதி ருடுபதி குறை பக்கந், தேறி நின்றிடு சதுர்த்தசி குசன்கதிர்க் கிழமையிற் சேர் வுற்று, வீறி னற்கதி கொடுக்குமுக் கோடியாஞ் சிவநிசிக் கிணையாமால். கூ.

உற்ற பன்னிரு மதியிலிவ் விரதநோற் றுளம்விழைந் தனமுன்னாட், பெற்று ளோரயன் மாசியிற் கேசவன் பிறங்கு பங் குனிதன்னிற், சொற்ற சித்திரைத் திங்களிற் பார்ப்பதி சூரியன் விடைமாதத், தற்ற மற்றிடு மிதுனமா தத்தர னாடியிற் குமரேசன். ௧0.

சிங்கத் தம்புலி கன்னியிற் சேடனிந் திரனெடுந் துலைத் திங்க, டங்கு கார்த்திகை நாமக டனுமதி தனின்மனோன் மனிதையிற், றுங்க மாரிமி விடபதே வன்பசுஞ் சுகமொழி யுமைவாம, பங்கனீட்ரு டந்திடத் தக்கநற் பக்கராத் திரிசொ ல்வாம். ௧௧.

மகர திங்களி னபரபக் கதிதிடை ஒருபிர தமையெய் தப், புகல் மன்றுதொட் டெதிர்ந்தபன் மூன்றுநாட் புசிப்ப தோர் பொழுதாகிப், பகர்த ரும்பதி னன்கினி னேற்பது பக்கராத் திரியாகு, மிகப ரந்தரு விரதமற் றிதற்கிணை யாவ ரே புகல்கிற்பார். ௧௨.

அருட ருஞ்சிவ ராத்திரி யிப்படி யைந்துபட் டதுவாகு, முருகு காதலோ டைந்தையு நோற்றனன் றனைத்தவை முடி யாதேன், மருவு மிங்கிதி னொன்றனை விதித்திடும் வரன்முறை வழுவாமற், பெருகு மன்புட னேற்றவர் பெறற்கரும் பெருங் கதி பெறுவாரால். ௧௩.

(௧0) அரன் - உருத்திரன்.

ஊதை முன்படு பஞ்சியி னுறுவினை யோட்டிமேற் பதஞ் சார்வான், கோதை பங்கன தருட்கடற் குளித்திடுங் கோதறு குணத்தீர்கா, ளோதை யாமெடுத் துரைப்பதிங் குமக்கினி யி மையவ ரறியாரிப், பேதை மானுட ரறிவரோ சிவநிசிப் பெரு மையின் றிறனம்மா. கச.

வேறு.

மத்தகமால் களிற்றுரிவை போர்த்துழுவை யுரித்துடுத்து மதியஞ் சூடும், வித்தகனீ ணிறமிடற்றுச் சிவனிரவா மியவிர தம் விளங்க நோக்கி, லுத்தமமத் திமமதம மெனவொருமூ வகைப்படுமா லொழுங்கிற் சொல்வன், முத்தழல்வேட் டிடு முனிவீர் கேண்மினெனச் சூதமுனி மொழிவ தானன். கரு.

விரித்தசெழுங் கதிர்ப்பரிதி மேற்றிசைபோ யந்திவந்து மேவுங் காறுந், தெரித்ததிர யோதசியாந் திதிநின்று பின்பு சதுர்த் தசிதான் கூடித், தரித்தவிரா வன்றிமற்றைப் பகன் முழுதுந் தங்கியிடிற் றறுகட் டக்தி, யுரித்தபிரா னிரசனிக்கு ளுத்தமத்தி லுத்தமா வுரைப்பர் மன்னோ. கசு.

உதித்தகதி ரத்தமித்த பின்கூடுஞ் சதுர்த்தசியுத் தமமா மென்பர், துதித்தவுத யாதியுத யாந்தமதாய்ப் பகலிரவு தோ யந்து நிற்குங், கதித்தசதுர்த் தசிகதிரத் தமிக்குமுன்சேர் சது ர்த்தசிநற் கங்குற் போதின், மதித்தபத்து நாழிகையிற் பின் கூடுஞ் சதுர்த்தசிமத் திமமா மன்றே. கஎ.

அல்லினிரு பதுகடிகை யளவுசதுர்த் தசிதானின் றதற் குப் பின்னர்ச், சொல்லிலுயர் மதிபரிதி யுடன்கூடுமமாவாசை தொட்டத் தோடு, புல்லியிடி னதமசிவ ராத்திரியா மெனவெ டுத்துப் புகல்வ ரல்லி, னல்லியல்சேர் பதின்மூன்றாந் திதி தொட்ட சதுர்த்தசியே நன்ற தாமால். கஅ.

கங்குறனிற் பதின்மூன்றாந் திதியுடனே சதுர்த்தசியோர்
கலைதான் கூடி, லங்ஙனதே சிவராத்திரியாக் கொளல்வேண்டுஞ்
சிவரூப மாகு மேன்மை, யாங்குசதுர்த் தசிதிரயோ தசிசத்தி
ரூபமிவை தாமென்றுன் னுசித், துங்கமுறக் கூடுமியாச் சிவலிங்
கா காரமெனச் சொல்வர் மன்னோ. ௧௯.

ஆசிலமா வாசைதொட்ட சதுர்த்தசிதா னவியக லங்கம்
போலாம், பேசுமதிற் பூசைசெய்யிற் பிரமகத்தி தோடமுண்
டாம் பிறங்கு மந்தர், மேசுவழு வாதங்கெடுமுற் புண்ணியம்
போஞ் சிந்தைசெய்யிற் றிடுக்கிட் டுள்ளங், கூசுநர கங்கட
மிற் கொடியவிர வுரவமதிற் குளிப்பர் மாதோ. ௨௦.

ஊறிலமா வாசைதொட்ட சதுர்த்தசிவை திகர்விரதத்தர்க்
குரியவாகுங், கூறுபுகழ்ச் சைவர்முன்னாட் கொளல்வேண்டுந்
திருவோணங் கூடி நிற்கு, மாறிலமா வாசைதொட்ட சதுர்த்
தசிதான் விரதத்தருக்கும் வாழ்வின் மிக்க, தாறில்கிர கத்தருக்கு
மாகுமமா வாசைபெறுந் தோடமின்றே. ௨௧.

அற்றமிலத் தராத்திரிமுன் சதுர்த்தசியோர் கலைகூடி
லன்று கொள்க, செற்றமிலச் சதுர்த்தசிநள் ளிரவினிற்பின்
னொருகலைதான் சேடிக் துற்றன், மற்றைநாட் கொளல்வே
ண்டும் வைதிகரும் விரதத்தர்களு மதிக்கும் பக்க, முற்றதுதா
னிரண்டுபடி விரவிலதி சத்திதா னுசித மாமே. ௨௨.

திதித்திரயஞ் சேர்ந்துவரில் வைதிகர்க்குஞ் சைவருக்
குஞ் சிறந்த தாகு, மதிக்குமற்றை நிசிக்கடையி னமாவாசை
கூடுதன்முன் மழுமா னேந்து, நதிச்சடையோன் றனைப்பூசை
புரிந்திடுதல் சைவருக்கு நன்று மென்றே, விதித்தனரான்
மதிக்கிழமைச் சதுர்த்தசிக்கு மிந்தமுறை வேண்டுந் தானே.

அற்றனின்மூ வைந்துகன்ன லாமளவிற் சதுர்த்தசிமுற்
றினத்திற்கூடி, மற்றைநா ளிரவுபதி னைந்துகன்ன லளவிலுமா

வந்தொன் றாகி, யுற்றிடிற்பிற் றினந்தனிலே பூசைபுரிந் திடலாகா தொழிக முந்தச், சொற்றதினைத் தருச்சனைசெய் திடவிதித்தார் சைவநெறித் துறைநின் றோரே. உச

முற்றிதியி லோர்பொழுதுண் டிடையில்விதித் திடுந்திதியின் முழுது முண்ணா, சிற்றிதனிற் றுயிலொருவி யேறேறி தனைப்பூசித் தியாம நான்கும், பிற்றிதியிற் சிவனடியார்க் கன்னநல்கிப் பாரணந்தான் பின்னர்ச் செய்யச், சொற்றிடுமா கமமாதச் சிவநிசிநோற் றிடக்கருதித் துணிந்து ளோர்க்கே. உரு.

ஓதவருஞ் சோமசிவ நிசிதனைக்குச் சதுர்த்தசியி னுண்டுவாவிற், றாதவிழ்பூங் கொன்றையணி வேணியனைப் பூசைசெய்து சாமநான்குந், தீதகன்ற பிரதமையிற் பாரணஞ்செய் திடவேண்டுஞ் செப்பு மைந்தா, பேசமுள்ள சிவநிசிக்குட் சதுர்த்தசிசங் கரனிரவாய்ப் பிறங்கி னின்றால். உசு.

இன்னசிவ நிசிவிரத நோற்றிடுவோர் முற்றினத்தி லெய்தா நின்ற, வன்னதிர யோதசியி லொருபொழுதுண் டரிவையர்தோ ளணைத லின்றிச், சொன்னவிர வகற்றியற்றை வைகறையிற் புனிதநதித் தோயத் தாடிப், பின்னர்தின மணியுதிக்குங் காலையிற்செய் கடனனைத்தும் பிறழா தாற்றி. உஎ.

மதிமுடியோன் கோயிறனை வலம்வந்து தண்டனிட்டு வணங்கி வாயாற், றுதிபுகன்றில் வயினேகி யிழிகுலத்தோர் பாதகர்பாற் றுன்னி டாமற், கதியறுமற் றவருடன்வாய் பேசாமற் கண்ணினெதிர் கண்டி டாம, னதியிடைப்போய் நண்பகலி னானவிதி வழுவாது நன்னீ ராடி. உஅ.

துய்யவெண்டூ சிரண்டுடுத்திட் டுச்சியிற்செய் கடன்கழித்துச் சுடலை யாடு, மையனைப்பூ சிக்குமிடங் கோமயத்தான் மெழுகியபின் னம்பொன் னாடை, செய்யதுகி னேத்திரத்தால்

விதானித்து வாழைகன்னல் சிறக்க நாட்டி, மையகனுண் மலர்மாலை தோரணங்க ணிரைநிரையின் வயங்க நாற்றி. உகூ.

கண்ணுதலை யருச்சித்தற் குரியபொரு ளனைத்தினையுங் கருதித் தேடி, விண்ணுலவு கதிரருக்கன் மேற்றிசைவே லையின்முழுக வீழும் வேலை, தண்ணுலவு சந்தனநற் றூபதீ பாதியிம சயில மீன்ற, வொண்ணுதலோர் பாகனுறை சந்நிதியின் முன்னமிவை யுதவி யன்பால். ௩௦.

அங்கியினிற் றண்புனலேய்ந் தருக்கியநற் கிரியைசெப மாற்றிப் பின்னர், வந்திளமா மதிமுடிசத வள்ளறனைப் பீடிகையில் வைத்துத் தாபித், திந்தியமோ ரைந்தவித்திட் டாகமநூன் மறைகளெடுத் தியம்பா நிற்கு, முந்தியமந் திரங்களினாற் பூசைவிதி வழுவாமன் முடித்தல் வேண்டும். ௩க.

முன்னமுதற் சாமதநி லானிலைந்தா லாட்டிடுக முறைமை யாகப், பின்னயிரண் டாஞ்சாமத் தைந்தமிர்தா லாட்டிடுக பிரசந் தன்னு, னன்னயஞ்சேர் மூன்றாய சாமதநி லாட்டிடுக நாலாஞ் சாமங், கன்னலின்சாற் றினிலாட்ட காரணமா கம மெடுத்துக் கழறிற் றன்றே. ௩உ.

ஆசகல்கோ சலந்தயிர்பால் கோமயநெய் கௌவியமைந் தாகுஞ் செந்தேன், காசகல்சர்க் கரைதநிபா னெய்யிவையைந் தமிர்தமெனக் கரைவ ரித்தை, மாசகல்கௌ வியம்போலத் தனித்தனியே தாபித்து மதியஞ் சூடு,மீசன்மணி முடிமீதி லாட்டிடவா கமநூல்க ளெடுத்துக் கூறும். ௩௩.

சந்தனமுற் சாமமதி லகிலிரண்டாஞ் சாமமதிற் சாம மூன்றிற், கந்தமிகுங் கருப்பூரங் கடைச்சாமங் குங்குமஞ் செங் கமலப் போதில், வந்தருணன் முகன்முருகன் மகபதி வா னவரெவரும் வணங்கியேத்து, மந்தமிலா முழுமுதல்வன் றிருமேனி குளிரமிகு மன்பிற் சாத்தி. ௩௪.

முற்சாமம் வில்வமதிற் பிற்சாம முளரிமலர் மூன்றாஞ் சாம, நற்சாதி மலர்நாலாஞ் சாமமதி னந்தியா வர்த்தப் பூக் கொண், டற்சாருங் களத்திறைச்குச் சாத்துகவென் றுகமத்து ளதிக மான, சொற்சார முள்ள சித்தத் தந்திரநூ லுருத்தி தனைக் சொன்ன தாமால். ௫௫.

முண்டகமுற் சாமமதிற் றுளசியிரண் டாஞ்சாம மூன்றாஞ் சாமங், கண்டகஞ்சேர் கூவிளைமூத் தளக்கிளைநான் கெனப் பகுத்த சடையிற் சாமம், விண்டலர்ந்து மதுத்துளிக்கு முற் பலத்தின் மலர்சாத்த வேண்டுமென்றே, யண்டரெலாம் புகழ் க்கேதத்துஞ் சிந்தியமா மாகமநூ லறைந்த தன்றே. ௫௬.

வில்லொச்சி மாவிலங்கை முட்கிளுவை வெள்ளில் பஞ்ச வில்வ மாகச், சொல்வரிவற் றின்றளைமுக் கிளையாகக் கொண்டயன்மா லுடர்ந்துங் காணு, நல்வரதன் றிருமுடியி னுஞ்சுசா மமுஞ்சாத்த நன்று மீது, கல்வியறிந் தவருணரக் காரணவா கமமுரைத்த கருத்தா மன்றே. ௫௭.

எதமின்முற் சாமமுற்கப் பருப்பொடன்ன மாகுமற்றை யிரண்டாஞ் சாமங், கீகல்பா யசமாகுஞ் சாமமொரு மூன்றதனிற் றிலஞ்சே ரன்ன, மோதவரு சாமமொரு நான்கதனிற் சுத்தான்ன முரைத்தார் பூத, நாதனிவே தனந்தனக்குச் சுத் தான்ன மாஞ்சாம நான்கிற் கும்மே. ௫௮.

சறுவஞ்ஞனே யுக்கிரனே சங்கரனே சிவனேசாம் பவனே சான்றாய்ப், பெறுகதியை நல்கியிடு மீசான னேமகவுக் கிரனே பேசு, மறுவறுபூ தாதிபதி யேயென்னு மந்திரமோ ரெட்டு மோதி, யுறுதியுடன் றூபாதி நிவேதலங்க ளனைத் தினையு மொழுங்கிற் செய்தே. ௫௯.

நாமத்தி னிருக்கெனுஞ்சொன் னட்டமறை முந்தவந்து நண்ணுஞ் சாமந், தோமத்தி னகற்றிரண்டாஞ் சுருதியிரண்

டாஞ்சாமஞ் சொற்ற மூன்றுஞ், சாமத்திற் சாமமறை யீற்றி லுறு மறைநாலாஞ் சாமந் தன்னி,லிமத்தி னின்றுடு மாதிதிரு முன்னேறி யிருகை கூப்பி. ௪0.

உருகுமுளத் துடனிருந்து ணொருவியிரு விழிதனிலு முறக்க மின்றி, யிருளுறுசங் குலின்யாம நான்கினுமிப் படி யருச்சித் திறுதி தோறும், பொருவிலருக் கியங்கொடுத்து நாயடியேன் புரியுமிந்தப் பூசை தன்னைத், திருவுளத்தி னயந் தருள்வா யெனத்துதித்துத் தண்டனிட்டுத் திருமுன் வீழ்ந் தே. ௪௧.

இன்னணநற் சிவபூசை யியற்றியற்றைப் புலரிதனி லெ ழுந்து போகி,நன்னதியிற் புனலாடிக் காலையிற்செய் கடன்கழி த்து நவின்ற வாறே,யன்னதினத் தினும்பகற்போ தரனையருச் சித்ததற்பி னுதி தீக்கை,சொன்னகுர வனைப்போற்றி யந்தண ருக் காடையன்னஞ் சொன்ன மீந்தே. ௪௨.

அங்கவர்த மனுமதியாற் பாரணஞ்செய் திடல்வேண்டு மற்றை வைகற், றங்குபகற் கடனனைத்துங் காலசந்தி யுடன் முடித்துத் தாழுங் கீழ்பாற், செங்கதிர்வந் துதித்தாறு கன்ன லுக்குட் பாரணந்தான் செய்தா ராகிற், றங்கமுறு கவளமொ ன்றுக் கனந்தபல முளதெனநூல் சொல்லு மாதோ. ௪௩.

அலைசெறிபாற் கடல்விடமுண் டருள்வான்முப் புரந்தழ லுக் களிப்பான் மேருச், சிலைகுனித்த சிவனிரவிப் படிநோற் போர் சிவகதியிற் செல்வ ரன்றிக், கலைமுழுதுங் கற்றுணர்ந்த மாதவத்தி ரன்னவர்முற் கருவின் மூவேழ், தலைமுறையி லுள் ளவருஞ் சத்தியமுத் தியிற்சேர்த றப்பி டாதால். ௪௪.

அறைமறைமந் திரவிதியா லருச்சிக்க விரகிலரே லன்ப ருள்ளத், துறைபரம னைந்தெழுத்தை யுச்சரித்தீ ரெட்டுவகை யுபசா ரத்தாற், பொறைதருமன் புடன்பூசை புரிந்திடுக

பொறியளிகள் பூந்தா தூது, நறைகமழ்செங் கமலமலர் நான்
முகத்தோன் பூசையினு நயப்ப னம்பன். ௫௫.

இத்தகைய சிவார்ச்சனைசெய் திடமாட்டார் விருத்தர்
கொடி யிடையார் நோய, ருத்தமநற் சிவநிசியி லூரேனுந் துயி
லீத்துச் சாம நான்குநு், சித்தமிக்க களிகூர்ந்து சிவபுராணங்
கேட்டுச் செபங்கள் பண்ணி, முத்தனுறை சினகரத்திற் சென்
றரனைச் சேவித்தன் முறைமை யாமே. ௫௬.

அசிக்கணுமை பங்கனைமுற் சாமத்தி லருச்சித்தாங் கதற்
குப் பின்னர்ப், பசிக்கழிந்தோர் நீர்சிறிது பால்சிறிது பருக
வன்றேற் பழங்கள் சற்றே, புசிக்கசல பானநன்று மத்திமம்
பால் பழமதமம் பொருவில் கந்தந், சுசிக்கொளப்பங் தோசை
பிட்டு மாந்தலத மத்தமஞ் சொல்லுங் காலை. ௫எ.

பகர்தருபா ரணைமுழுவாப் புணர்ந்திடுமுன் பலன்கொள்
சைவர் பண்ணை வேண்டு, மிகநாளும்ப் புரமெரித்த பரமனுயர்
சீர்த்திகளை யெடுத்து முன்னோர், புகல்சரிதை பாராட்டிப்
பிற்பொழுது போக்கியெழு புரவித் தேரோ, னகல்பொழுதிற்
கடன்கழித்துந் துயில்வரற்றை யந்தியன்ன மருந்த லாகா.

பாரணைந்தான் புரிந்ததற்பின் பகற்பொழுதிற்சோம்பொடு
கண் படைசெய் தாரே, லாரணர்கள் பயின்றகுல வந்தண
ராம் பதிற்றிரட்டி யாயி னோரைக், காரணங்க ளொன்றுமின்
றிக் கொன்றகடும் பழியடைவர் கருதுஞ் சாந்திப்,பேரணங்கி
லோமமறை விதிப்படியே புரியிலந்தப் பிழைபோ மன்றே.

முத்தியினை விரும்பிமுதற் சங்கற்பந் தவறாது மூவெட்
டாண்டு, பத்தியுட னிவ்விரத நோற்றதற்பின் வேதியர்க்குப்
பசுப்பூ தான நித்திலவெண் ணகைக்கன்னி தானமன்ன தான
முட னிதிய நல்கிப், புத்தியுடன் சிவநிசியாம் விரதமொழி
வதுவழக்காப் புகல்வர் மன்றே. ௬௰.

வேறு.

இந்நல் விரதந் தனைச்சிவ னந்திக் கிசைத்திட வுணர்ந்துசெங் கதிரோன், கந்தவேள் கதைக்கைக் காலன்விற் காமன் கடவுளர் கண்ணொரா யிரத்தோன், செந்தழற் கடவுண் மதிநிதிக் குபேரன் செப்பிய வரன்முறை நோற்றுத், தந்தம மனத்தில் விழைந்தன பெற்றுத் தசைபெறு தலைவரா யினரால். ௫௧.

என்றுரைத் திடலு நைமிச வனத்தி லிருந்தவ ரிருகரங் கூப்பி, நன்றுரைத் தனைநீ நானிலத் துள்ளோர் நவையறு சிவநிசி நோற்றிட், டொனறுதற் கரிதா முத்திபெற் றவர்க ளுளரெனி லுரையென வுயர்ந்த, குன்றுறழ் தவத்துச் சூதமாமுனிவன் கூறுவன் கேண்மினென் றிசைப்பான். ௫௨.

சிவராத்திரிமான்மியச்சருக்க முற்றிற்று.

சிவமயம்.

சோமவாரகற்பம்.

எல்லாந்தா மென்னவுறு மீச னிறைவியருள்
பொல்லார்நல் லாரெமக்குப் போது.

இனிச்சோம வார விரத மிசைப்பா
முனிச்சோம நாதனடி யும்.

உமையுடனே யொன்றி யுறுஞ்சிவன்பேர் சோம
னுமைசிவன்கா ரம்மதுவென் றோர்.

(௧) பொல்லா - பொல்லாப்பிள்ளையார்; பொள்ளாரென்பது லளவொற்றுமைபற்றிப் பொல்லாரென்றாயிற்று. உளியாற்செய்யப்படாதவரென்பதாம். எனவே, சுயம்புமூர்த்தி யென்றபடி.

எட்டெட் டருள்விளையாட் டீச னியற்றினனென்
றிட்டமுறக் கூறுமிய லின். ௪.

எக்கடவு ளோர்களினு மேற்றமிகுஞ் சோமசுந்த
ரக்கடவு ளுக்குரித்திஃ தாம். ௫

ஆய்ந்தறிந்திவ் வார விரத மனுட்டிக்க
மாய்ந்துவிடப் பாச வலி. ௬.

கண்ணுதன்முன் கார்த்திகைமுற் சோமவா ரந்தன்னிற்
பண்ணுக சங்கற் பனை. ௭.

மற்றுமுள மாதமுதற் சோமவா ரந்தன்னிற்
பற்றுக சங்கற் பனை. ௮.

ஆண்டொன் றிரண்டாதி யாறிரண்டல் லாலென்று
மீண்டியற்று வாம்விரத மென்று. ௯.

விண்ணப்பஞ் செய்து விமல னிறைவியையு
மெண்ணியுளத் தின்கணுமுற் றின்பு. ௧௦.

முந்திய சந்தி முடித்து முறையாமச்
சந்தி தனையுஞ் சமைத்து. ௧௧.

கூவிளத்தின் மண்கோ மயமெள் குசையறுகு
மேவமுறை யிட்டெலின் மேல். ௧௨.

உத்தம தீர்த்தத்தின் மூழ்கி யுகளவெள்
வத்திரம் வீக்கிவர முற்று. ௧௩.

முடித்தந்தி சந்தி முனிந்தைம் புலனு
மொடித்தைந் தெழுத்தையுளத் தோர்ந்து. ௧௪.

இந்த விரத மிடையூ றறநிறையத்
தந்திமுகன் பூசை சமைத்து. ௧௫.

சிவனையருச் சிக்க சிவராத் திரிபோற்
சிவவாக் கியமுந் தெரிந்து. ௧௬.

ஐந்துமுக மைம்மூன்று கண்ணை யிருபுயமுஞ்
சிந்தனைசெய் துள்ளிலிங்கத் தின். ௧௭.

திருவுருவந் தெண்பளிங்குஞ் செஞ்சடையி னிந்து
மருவுமிரு பாதமுமற் றும். ௧௮.

எண்ணெண் குறிப்பும் மையெண் ணிரண்டுமுற
வெண்ணணிச் சதாசிவருக் கே. ௧௯.

ஆட்டுகவா னைந்து மமிர்தவித மோதாந்து
பாட்டுகெபான் முப்பழமு மார்ந்து. ௨௦.

ஆட்டுகபின் னெல்லிக்காப் பாதிசிறு குட்டநறை
யாட்டுகநெயச் சிக்குமற வாய்ந்து. ௨௧.

ஆட்டுகபின் னேல மளவிய சீதநீ
ரீட்டுநவ கும்பத் திறம். ௨௨.

தூயநவ வத்திரத்தா லீரந் துடைத்திடுக
மையமனுவும் பகர்ந்து. ௨௩.

சிறக்கவே யாவாக நதியெலாஞ் செய்க
மறப்பை யொழித்தே மனத்து. ௨௪.

சாத்துகபட் டாடை தபனியப்பூ ணூலணியும்
வாய்க்க வணிக மகிழ்ந்து. ௨௫.

சாத்துக சாந்துபனி நீபளிதங் குங்குமமுஞ்
சேர்த்தியுளத் தாதரவு செய்து. ௨௬.

(௨௦) வாழைப்பழம் பலாப்பழம் மாம்பழமென்னும் முப்பழங்களையும் [illegible] கூட்டி, ஆட்டிவதுமன்றி, கொம்பழம் நாரத்தம்பழம் தமரத்தம்பழம் குளஞ்சிப்பழம் முதலிய பழம் இவற்றைத் தனித்தனி ஆட்டுவதே விதி. அவை முக்கனியென நூலகளில் வழங்கப்படுதல்போல இவை ஐங்கனியென வழங்கப்படும்.

வில்வமும் வெண்கமல மாதிவித வெண்மலரு
மல்கமுடி வைக்கமனு வால். ௨௭.

எழுத்தைந்து மந்திரத்து ளேற்றம்வில் வத்தின்
முழுக்கிளையும் பச்சிலையுண் முன். ௨௮.

பைசாசத் தும்பை பழிப்பென் றொழித்திடுக
பைசாச மெல்லாம் பழிப்பு. ௨௯.

நீர்ப்பூக் கொடிப்பூ நிலந்த மரத்தின்பூப்
பார்ப்பூவுஞ் சாத்தறிந்து பாங்கு. ௩௦.

அருச்சிக்க வாயிரம்பே ரால்வில்வத் தாலே
நெரித்த கிளைதன்னை நீத்து. ௩௧.

பாயச நெய்சர்க் கரைபயின்ற பாகவிதந்
தூயவர் முன்னே தொகுத்து. ௩௨.

பொரித்த கறியு மபூப விதமு
நிரக்க வதன்மே னிறைத்து. ௩௩.

செய்க நிவேதனந் திவ்விய முத்திரையாற்
பைய மனுவும் பகர்ந்து. ௩௪.

பாத்திய மாதி பகர்விதியாற் றூபாதி
வாய்த்துறவே செய்க மதித்து. ௩௫.

பவானிபவ னென்று பகரிருபத் தாறும்
பவானி பவனுக்குப் பாங்கு. ௩௬.

பாதங் கணைகாலு வூருப் பரியவரை
யோர்தலுறு நாபியுர மும். ௩௭.

திரடோள் களம்வாய் சிறந்தகுள முச்சி
யுருமுழுது மர்ச்சிக்க வோர்ந்து. ௩௮.

...னிக வாமப் னொகசி வில்வ
மென்னிய ந் செப்பாது மிறைக்கு. ௧௬

அதன்பின் நச சிககவி ராற ஞெள
மதனபனீ மெட்பிற்று வாய. ௧௭

எட்டே முளைகுமா தேவாதிய குரீ
மெட்டிரு சிவாந்மென மெனா. ௧௮

இயற்ற க மற்றை விசியினை யெல்லா
மயர்ச்சி மனா த பசுது. ௧௯

ஒ ஈாருய்ச சி கூர் மெய ரிமணடா புறப்
பொன் முழுமா குபிரமணடற் ப ற. ௨௰

ஈ ய பாபோ போறறி மனிறுமாச சதசுக கது
நீர்பாபோ போறறி றைந்த. [illegible]

ஆகக நீறாற் ... மனாதபருவமெய
னோயகினவோ போற்றப்பயிர் கோய்த்து [illegible]

ஏறுகிமல முதசமே யாதிய்த பிப்பா
வெறுகிப போற்றிய மெச்ற. [illegible]

துதிதது வமோகச சூழ்ந்த பணிந்து
விதிததிற மெல்லாய விளாதது. [illegible]

வாக்கினாற் சொல்ல நினைகக மனந்தினை
வாக்கையினாற் றீண்டவும்பெற் றுப் [illegible]

எங்கெதிமென் று யிறைக் கெள்ள குணாவபிரேப
மிங்குமென வுள்ள தெணி [illegible]

இயற்றசயா மந்தோறும் பூசையினை ட்சாம
கயர்ச்சியா முன்மைறபி ஞல் ௩௰

(௪௩) - பாகசின முமைப்பெர் சிறந்தபடப்... ...ழிசய்தாய்ப்பெற்றுமெனை து

மற்றையநாட் சந்தி யிரண்டிணையும் வாய்க்கவே
முற்றிக் குரவனடி முன்.

பணிந்தலர் தூவியவன் பாதந் தலைமே
லணிந்தவனுற் பெற்றே யருள்.

இட்டப் படியருந்தி யந்தணர்க்கு மீசனுக்காட்
பட்டதவத் தார்க்கும் பரிந்து.

அருந்துவித்தே யாதுலர்க்கு மற்றை யவர்க்கு
மருந்துகதாம் பின்னை யனம்.

அதன்பின்பு துஞ்சா தமலன் புராண
விதந்தன்னைக் கேட்க விழைந்து.

இயற்றினர் சங்கற் பனையளவு மிவ்வா
றயர்ச்சி மனத்தி லறுத்து.

சென்று சிவபுரத்துட் செல்வத் துடனிருப்பா
ரொன்றுமொழி யாதொடுங்கு நாள்.

விடமூல நோயும் விமல மயமா
யுடனுறைவர் பேரின் புற.

தாமுள்ளளவுந் தவமுந் தனுட்டித்தார்
தாமமலன் றன்புரத்தைச் சார்ந்து.

அகர்த்தச் சிவன்கர்த்தா வஞ்ஞாதா ஞாதா
செகத்திறுதிப் புக்குமெனத் தேர்ந்து.

தம்முளிரண் டற்றவன் சாதகத மன்றனக்குத்
தம்மைக் கரணமெனத் தாம்.

தெருண்டிருந் தெல்லாச் செகமுமொடுங் கும்போ
திருண்டமல முந்தீர வே.

---

(௩௧) சாதகதமன்றனக்கு என்பதும் பாடம்.

அழியா வளவிலாப் பேரானந் தத்தி
னொழியா துறைவ ருகந்து. ௬௩.

இவ்வா றியற்றவரி தென்னினித னின்னெளிய
வவ்வா றறிகவறை வாம். ௬௪

முடித்தற் றையநாளைச் சந்தியொரு மூன்று
மொடித்தா னுறக்க மொழித்து. ௬௫

இயற்றிடுக வந்தரியா கம்யாமந் தோறு
மயர்ச்சி மனத்தி லறுத்து. ௬௬.

மற்றையநாட் பாரணத்தைச் செய்க விதிவழியே
யற்றிடுக துஞ்சுமவ லம். ௬௭.

இயற்றினர் சங்கற் பனையளவு மிவ்வா
றயர்ச்சி மனத்தி லறுத்து. ௬௮.

தீர்ந்திடுவர் தீவினைக ளெல்லாஞ் சிவபுரத்தைச்
சேர்ந்திருப்ப ரின்பந் திளைத்து. ௬௯.

பிறப்பரோ மண்ணிற் பிறவார் பெருகோ
யறுப்ப ரமலமய மாய். ௭0.

இதுவு மரிதேல் விதனி லெளிய
வதுவு மறிகவறை வாம். ௭௧.

முற்றியே யற்றைநாட் சந்தியொரு மூன்றினையு
மற்றே நீசியூ ணது. ௭௨.

மற்றையநாட் பாரணத்தைச் செய்க விதிவழியே
யற்றிடுக துஞ்சுமவ லம். ௭௩.

இயற்றினர் சங்கற் பனையளவு மிவ்வா
றயர்ச்சி மனத்தி லறுத்து. ௭௪.

பாவ விதங்கள் பறிந்து விடப்பரம
தேவன் புரிமைச் செறிந்து.

அங்குள்ள போக விதங்க ளருந்திடுவ
ரங்கரி தேதே யவர்க்கு.

கணிப்பரிய கற்பங் சுழிய வதன்பின்
மணிற்பிறப்பர் முன்யரசதால் வந்து.

முடிப்பர்முன் சொன்ன முதல்விரதந் தன்னை
யொடித்தா ருறுறக்க மொழித்து.

பற்றுவ ரீசன் பரமசிவபுரத்தை
யுற்றிருப்பா ரின்ப முகந்து.

பேரிலயந் தன்னிற் பிரியப் பெருகோயு
மோருருவ மாவர்சிவத் தாற்று.

இதுவு மரிதே விதரரி லெவரிய
வதுவு மறிகயமற னாய்.

சந்திபொரு மூன்றுஞ் சமைத்து விசிதன்னி
லந்தணர்க்கு மூட்டி யனம்.

அருந்துக சுற்றத் தவரோ டதன்பி
னருந்தும் விதியு மறிந்து.

இயற்றினர் சங்கற் பனையளவு மிவ்வா
றுயர்ச்சி மனத்தி லுறுத்து.

இருப்பர் பெருவளத்தோ டிப்பாரிற் பாவ
மரிப்பரதன் பின்சிவலோ கத்து.

சேர்வர் திளைப்பர் சிறந்தபல போகவிதஞ்
சார்வரதன் பின்னித் தலம்.

இயற்றுவருண் ஞானமுறங் காதுமிறை பாச
நயர்ச்சியற வர்ச்சனையன் பால். ௮௭.

கட்டார்ந்த விண்டை கமழ்தூப மாதியான்
முட்டாம லென்று முடித்து. ௮௮.

சேர்வர் சிவபுரத்தி னின்பத் திளைத்திருப்பா
சார்வரதன் பின்னமலன் றாள். ௮௯.

இதுவு மரிதே லிதனி லெளிய
வதுவு மறிகவறை வாம். ௯0.

முடித்திரண்டு சந்திட்கன் மூலைக் ததன்பி
னடித்திரும்பும் வேலை யறுத்து. ௯௧.

அருந்துவித் தன்பர்க் கதன்பி னுறவோ
டருந்துக நானு மனம். ௯௨.

இயற்றினர் சங்கற் பனையளவு மிவ்வா
றயர்ச்சி மனநதி லஃறுநது. ௯௩.

இட்டமுறப் பாரி லிருப்ப ரதன்பின்பு
சிட்டன் சிவலோகஞ் சேர்ந்து. ௯௪.

அங்குள்ள போக மருந்தி யதன்பின்பு
மிங்கே வருவ ரிழிந்து. ௯௫.

முற்றுவ ருண்ணு வுறங்கா மூதற்பூசை
யெற்றுவர் பாச மெலாம். ௯௬.

செறிவர் சிவபுரத்தி னின்பந் திளைப்ப
ரறுவ ரிருளமலத் தாய். ௯௭.

முடித்திடுக சங்கற் டனைகாண் முடிவிற்
படித்த விதிவிதத்தைப் பார்த்து. ௯௮.

முடிக்கும் வினையிலைத்தம் மெய்ம்முடிவு காறு
மெடுத்தவிர தம்மியற்று வார்க்கு. ௯௯.

இடைவிடு வாறு முடிவியற்றூ றாறு
மடையார் பலமென் றறிந்து. ௧௦௦.

இடையில் விடாதே முடிவு மியற்றல்
கடனே பலன்கொள்வார் காண். ௧௦௧.

ஒருபான் கனிட்டமுப் பானுத் தமமே
யிருபான் கழஞ்சிடையென் றெண். ௧௦௨.

வெள்ளி விசிட்டம் விமலர் திருவுருவுங்
கல்லது செம்பினு மாம். ௧௦௩.

ஒருமுகங் கண்மூன் றிருநாற் புயத்துத்
திருவுருவஞ் செய்கசிவ னுக்கு. ௧௦௪.

மழுமான் வரத மபயங் கரத்தி
னெழுமதியும் பின்னுசடை யின். ௧௦௫.

உமைக்குந் திருமுக மொன்றுறு மேனி
யமைத்தோ ளிரண்டென் றறி. ௧௦௬.

உற்பலந் தன்னை வலக்கையுற வோங்குவிக்க
மற்றையகை தாளொடுற வை. ௧௦௭.

அருந்திப் பகலிலொரு போதருண வாரத்
தருந்தா திரவி லனம். ௧௦௮.

மற்றையநாட் சந்தி யொருமூன்றும் வாய்க்கவே
முற்றிக்கா மாதி முனிந்து. ௧௦௯.

வேதா கமமுணர்ந்த வேதியனைத் தேசிகனைப்
